# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் "ஏ" தகுதி பெற்றது)

நாள் : 28.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்,காரைக்குடி சுப்ரீம் அரிமா சங்கம், மற்றும் காரைக்குடி அரசு சுகாதார நிலையம் ஆகியன இணைந்து 28.02.2017 அன்று அழகப்பா பல்கலைக்கழக ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறையில் இரத்த தான முகாமினை நடத்தியது.




இரத்த தான முகாமினை அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் துவக்கி வைத்தார். அழகப்பா பல்கலைக் கழக கலைத்துறை முதன்மையர், பேரா.க.மணிமேகலை, வணிகவியல் துறைத்தலைவர் பேரா.டி.ஆர்.குருமூத்தி மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மொத்தம் 45 மாணவர்கள் இரத்தம் வழங்கினர். இம்முகாமிற்கான ஏற்பாட்டை இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு.குருபாண்டி, காரைக்குடி அரசு சுகாதார நிலைய இரத்த வங்கி மருத்துவ அதிகாரி டாக்டர். செல்லமுத்து, ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறைத் தலைவர் (பொ) முனைவர்.பி.மதன் மற்றும் உதவி பேராசிரியர் முனைவர்.நடராஜன் ஆகியோர் இம்முகாமிற்கான ஏற்பாட்டை செய்திருந்தனர்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)